

Saidai Duraisamy's
**Manidhanaeyam Free IAS Academy**
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| வினாத்தொகுப்பு எண்: |
|---|
| |

பதிவு எண்: | | | | | | | | | | |

## TNPSC - தொகுதி - IV & VAO தேர்வு - இணைய வழி தொடர் மாதிரி தேர்வு
## இந்த வினாப்புத்தகம்
## பகுதி-அ (பொதுத் தமிழ்) உள்ளடக்கியது

**கால அளவு: ஒரு மணி நேரம் முப்பது நிமிடம்** **மொத்த மதிப்பெண்கள்: 150**

வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

### முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, 100 வினாக்களைக் கொண்டுள்ளது.
3. விடையளிக்கத் தொடங்கும் முன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் பெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினா தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
4. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
5. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
6. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால் உங்களுக்கு வழங்கப்படும். விடைகளை குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
7. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்க தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
8. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். உங்களுக்கு விடை தெரியவில்லை, எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும். எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடைதான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
9. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
10. குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கு வினா தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.
11. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்ற தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

[Turn over]



Saidai Duraisamy's
Manidhanaeyam Free IAS Academy
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| Question Booklet No: | Register Number: |
|---|---|
| | |

# TNPSC - Group - IV & VAO Exam - Online Test Series

## This Booklet Contains

## Part-A (Tamil Eligibility-Cum-Scoring Test)

**Duration: One Hour Thirty Minutes** — **Total Marks : 150**

**Read the following instructions carefully before you begin to answer the questions**

## IMPORTANT INSTRUCTIONS

1. You will be supplied with this question booklet 15 minutes prior to the commencement of the examination.
2. This Question Booklet contains 100 questions.
3. Before answering the questions, you .shall check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. If any defect is noticed in the question booklet, it shall be reported to the invigilator within the first 10 minutes. and get it· replaced with a complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.
4. Answer all the questions. All the questions carry equal marks.
5. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
6. An answer sheet will be supplied to you separately by the room invigilator to shade the answers. Instructions regarding filling of answers etc., which are to be followed mandatorily, are provided in the answer sheet and in the mem"oranduin of admission (Hall Ticket).
7. You shall write and shade your question booklet number in the space provided on page one of the answer sheet with BLACK INK BALL POINT PEN. If you do not shade correctly or fail to shade the question booklet number, your answer sheet will be invalidated.
8. Each question comprises of five responses (answers) : i.e. (A), (B), (C), (D) and (E). You have to select ONLY ONE correct answer from (A) or (B) or (C) or (D) and shade the same in your answer sheet. If you feel that there are more than one 90rrect answer, shade the one which you consider the best. If you do not know the answer, you have to mandatorily shade (E). In any case, choose ONLY ONE answer for each question. If you shade more than one answer for a question, it will be treated as a wrong answer even if one of the given answers happens to be correct.
9. You should not remove or tear off any sheet from this Question Booklet.You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Room during the time of examination. After the examination. you must hand over your Answer Sheet to the Invigilator. You are allowed to take the Question Booklet with you only after the Examination is over.
10. You should not make any marking in the question booklet except in the sheets before the last page of the question booklet, which can be used for rough work. This should be strictly adhered to.
11. Failure to comply with any of the above instructions will render you liable for such action as the Commission may decide at their discretion.

[Turn over]

# பகுதி-அ - பொது தமிழ்

# Part-A- General Tamil

## 12 ஆம் வகுப்பு – பாடம் – 1, 2, 3, 4

| | |
|---|---|
| வினாக்கள் : 1 - 100 | மொத்த மதிப்பெண்கள் : 150 |
| Questions : 1 - 100 | Total Marks : 150 |

1. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.
   1. வசனநடை கைவந்த வல்லாளர் என்று புகழப்படுபவர்.
   2. திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு ‘ நாவலர்’ பட்டம் வழங்கியது.
   3. பெர்சிவல் பாதிரியார் விவிலியத்தை தமிழில் மொழிபெயர்க்க உதவியவர்.

   யார் இவர்?
   (A) சி.வை. தாமோதரனார்
   (B) சோமசுந்தர பாரதியார்
   (C) ஆறுமுக நாவலர்
   (D) மாயூரம் வேதநாயகம்

2. மொழி என்பது மக்கள் படைத்து காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. மொழியை வளர்ப்பவரும் மக்களே ; மொழியால் வளர்ப்பவரும் மக்களே” என்று கூறியவர்.
   (A) தமிழன்பன்
   (B) மு.வ
   (C) திரு.வி.க
   (D) உ.வே.சா

3. பொருத்துக.
   a. தமிழ் அழகியல் - 1. ந. பிச்சமூர்த்தி
   b. நெல்லூர் அரிசி - 2. அகிலன்
   c. சுவரொட்டிகள் - 3. தி.சு.நடராஜன்
   d. காட்டுவாத்து - 4. ந. முத்துசாமி
   (A) 3 2 4 1
   (B) 1 4 2 3
   (C) 4 3 2 1
   (D) 2 3 4 1

4. கீழ்க்கண்டவற்றில் எது தவறு?
   1.மாமழை போற்றுதும் - சிலப்பதிகாரம்
   2.நீரின்றி அமையாது உலகு - ஆத்திச்சூடி
   (A) 1 மட்டும்
   (B) 2 மட்டும்
   (C) 1,2
   (D) எதுவுமில்லை

5. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   1. சர்வதேச வானிலை ஆய்வு நிறுவனம், கடலில் உருவாகும் புயல்களுக்கு பெயர் வைக்க ஒரு கூட்டமைப்பை உருவாக்கி உள்ளது.
   2. அதன்படி வங்கக்கடல், அரபிக் கடல் மற்றும் இந்திய பெருங்கடலில் உருவாகும் புயல்களுக்கு பெயர் வைக்க 8 நாடுகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.
   3. அந்த ஒவ்வொன்றும் எட்டு பெயர்களை பரிந்துரைத்ததன் பெயரில் 64 பெயர்கள் உள்ளன.

   மேற்கண்ட வாக்கியங்களில் எது /எவை சரி?

   (A) 1,2,3
   (B) 1,2
   (C) 2,3
   (D) 1,3

6. கீழ்க்கண்ட கூற்றை கவனி

   கூற்று 1 : உலகப் புவி நாள் - ஏப்ரல் 12
   கூற்று 2 : உலக சுற்றுச்சூழல் தினம் - ஜூன் 5

   (A) கூற்று 1 சரி 2 தவறு
   (B) கூற்று 1 தவறு 2 சரி
   (C) இரண்டு கூற்றும் சரி
   (D) இரண்டு கூற்றும் தவறு

7. அய்யப்ப மாதவன்,
   1. சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்தவர்.
   2. இதழியல் துறை, திரைத்துறை சார்ந்து இயங்கி வருபவர்.
   3. ‘இன்று’ என்ற புதினத்தின் குறும்படத்தை வெளியிட்டவர்.
   4. மழைக்குப் பிறகும் புயல், நீர்வழி முதலான கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார்.

   மேலே உள்ளவற்றில் எது/ எவை தவறு?

   (A) 2 மட்டும்
   (B) 3 மட்டும்
   (C) 3, 4
   (D) எதுவுமில்லை

8. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி.
   1. ஐப்பசி அடைமழை! கார்த்திகை கனமழை! என்பது சொலவடை.
   2. ஓர் ஆண்டை நான்கு பருவங்களாக வகைப்படுத்தியவர்கள் பழந்தமிழர்கள்.
   3. ஐப்பசி மற்றும் கார்த்திகை மாதங்களை கூதிர் பருவம் என்று அழைத்தனர்.

   மேற்கண்ட வாக்கியங்களில் எத்தனை சரி?

   (A) 1
   (B) 2
   (C) 3
   (D) எதுவுமில்லை

9. சொற்பொருள் அறிக : தவறான இணை எது?
   (A) புதுப்பெயல் - புதுப்பருவம்
   (B) புலம்பு - தனிமை
   (C) கவுள் - கன்னம்
   (D) ஆர்கலி - வெள்ளம்

10. பிரித்து எழுதுக: “கலங்கி”
   (A) கலம் + இ
   (B) கல + இ
   (C) கலங்கு + இ
   (D) கலம் + கி

11. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   1. திணை, பால், எண், இடம் ஆகியவை மொழியின் அடிப்படை பண்புகள் ஆகும்.
   2. தமிழ்மொழியில் பெயர்ச் சொற்களும் வினைச் சொற்களும் திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்துகின்றன.

   மேற்கண்ட கூற்றுகளில் எது/எவை சரி?
   (A) 1, 2
   (B) 1 மட்டும்
   (C) 2 மட்டும்
   (D) எதுவுமில்லை

12. மாயுரம் வேதநாயகம் தொடர்பான பின்வரும் வாக்கியங்களில் எது/எவை சரியற்றது?
   1. நீதிபதி
   2. மொழிபெயர்ப்பாளர் மற்றும் நாவலாசிரியர்.
   3. தமிழின் முதல் நாவலான, பிரதாப முதலியார் சரித்திரம் இவர் இயற்றிய நாவலாகும்.
   4. மயிலாடுதுறை நகரமன்றத் தலைவராக பணியாற்றியவர்.

   (A) 2 மட்டும்
   (B) 3 மட்டும்
   (C) 4 மட்டும்
   (D) எதுவுமில்லை

13. கீழ்க்கண்டவற்றில் சரியற்ற வாக்கியங்கள் எத்தனை
    1. வங்காரி மத்தாய் என்பவர் 'பசுமை வளாக இயக்கத்தை' தோற்றுவித்தவர் ஆவார்.
    2. 1967 ஆம் ஆண்டில் கென்யா நாட்டில் காடுகள் அழிக்கப்பட்டதால் ஏற்பட்ட பேரழிவு கண்டு மனம் வெதும்பி இந்த இயக்கத்தை தோற்றுவித்தார்.
    3. பின்னாளில், நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டு சுற்றுச்சூழல் அமைச்சரானார்.
    4. இவரது தன்னலமற்ற பணியை பாராட்டி 2004 ஆம் ஆண்டு இவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

    (A) 1
    (B) 2
    (C) 3
    (D) எதுவுமில்லை

14. கவிதை வரிகள்,
    1. கொட்டி இடிக்குது மேகம்
       கூவென்று விண்ணை குடையுது காற்று - பாரதிதாசன்.
    2. மீண்டுமந்த பழமைநலம் புதுக்கு தற்கு
       மெய்சிலிர்க்க தமிழ்குயிலே! - பாரதியார்.

    மேற்கண்டவற்றில் எது/ எவை சரி?
    (A) 1 மட்டும்
    (B) 2 மட்டும்
    (C) 1, 2
    (D) எதுவுமில்லை

15. பின்வரும் வாக்கியங்களுக்கு உரியவர் யார் ?
    "அஞ்ஞான்று எல்லி எழ நானாழிப் போதின்வாய் ஆழிவரம் பனைத்தே காலேற்றுக் காலோட்டப் புக்குழி"
    (A) சிற்பி பாலசுப்பிரமணியம்
    (B) ஆறுமுக நாவலர்
    (C) சோமசுந்தர பாரதியார்
    (D) பரிதிமாற் கலைஞர்

16. கீழ்க்கண்ட கூற்றை கவனி
    1. 2000 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ்-பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பாறை உள்ள இடம் மாங்குளம், மதுரை.
    2. தேனியில் பழங்குடியினரின் சமூக வாழ்க்கை விவரிக்கப்பட்ட ஓவியம் உள்ளது.

    மேற்கண்டவற்றில் எது சரி?
    (A) 1 மட்டும்
    (B) 2 மட்டும்
    (C) 1, 2
    (D) எதுவுமில்லை

17. கீழ்க்கண்ட கூற்றை கவனி
    1. திருமணம், குடும்பம் ஆகிய இரண்டு சொற்களும் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் இடம் பெற்றுள்ளன.
    2. 'குடும்பம்' என்ற சொல் முதன் முதலில் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது.
    3. சங்க இலக்கியத்தில் 'குடம்பை' என்ற சொல்லும் 20 இடங்களில் பயின்று வந்துள்ளது.

    மேற்கண்ட வாக்கியங்களில் எது சரியற்றது?

    (A) 1 மட்டும்
    (B) 3 மட்டும்
    (C) 1, 2
    (D) எதுவுமில்லை

18. பிழையற்ற இணைகள் எது?
    1. மறியிடைப் படுத்த மாண்பிணை போல் - ஐங்குறுநூறு
    2. என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும் - கலித்தொகை
    3. மனையோர் கிளவி கேட்கும் வழியதுவே - தொல்காப்பியம்

    (A) 1, 2
    (B) 2, 3
    (C) 1, 3
    (D) 1, 2, 3

19. தமிழர் பரம்பரை : ஏறுவரிசைப்படுத்துக
    1. பூட்டன்
    2. பெயரன்
    3. சேயோன்
    4. தந்தை

    (A) 3 2 4 1
    (B) 2 4 1 3
    (C) 2 4 3 1
    (D) 3 2 1 4

20. கீழ்க்கண்ட கூற்றை கவனி

    கூற்று 1: ஜலாலுதீன் ரூமியின் சில கவிதைகளை 'தாகங்கொண்ட மீனொன்று' என்ற தலைப்பில் என்.சத்தியலிங்கம் அவர்கள் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

    கூற்று 2: அவரது சில கவிதைகளை கோல்மன் பார்க்ஸ் என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

    (A) கூற்று 1 தவறு 2 சரி
    (B) கூற்று 2 சரி 1 தவறு
    (C) இரண்டு கூற்றும் சரி
    (D) இரண்டு கூற்றும் தவறு

21. அடிகோடிட்ட சொல்லின் பொருள் காண்க.
“அன்னவன் உரை கேளா
அமலனும் உரை நேர்வான்” - இதில் அமலன் என்பவர் யார்?
(A) அரக்கன்
(B) குகன்
(C) இராமன்
(D) அனுமன்

22. பொருள் அறிக.
1. உவா
2. உடுபதி
3. கிளை
(A) ஆசை, நிலவு, பிரிவு
(B) அமாவாசை, சூரியன், துன்பம்
(C) கோவம், சூரியன், பகைவர்
(D) அமாவாசை, நிலவு, உறவினர்

23. ‘எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே’ என்று பாடியவர் யார்?
(A) வெண்ணிகுயத்தியார்
(B) அவ்வையார்
(C) ஒக்கூர் மாசாத்தியார்
(D) குறமகள்

24. பின்வருவனவற்றுள் எது/எவை சரியாக பொருந்தியுள்ளது?
(A) கொடவாங்கல் - மாவு அரைக்கும் கல்
(B) கடகம் - புதியப்பெட்டி
(C) வெள்ளங்காட்டி - புறம் பேசுதல்
(D) ரோசி - உரசுதல்

25. கவிஞர் பூமணி தொடர்பான தகவல்களை ஆராய்ந்து சரியாக உள்ளவற்றை தேர்வு செய்.
1. கரிசல் எழுத்தாளர்களில் ஒருவர்.
2. பூ.மணிகண்டன் என்ற தனது பெயரைச் சுருக்கி பூமணி என்ற பெயரில் எழுதி வருகிறார்.
3. இவர் தமிழ்நாடு அரசின் கூட்டுறவுத் துறையில் பதிவாளராக பணியாற்றியவர்.
(A) 1, 2
(B) 1 மட்டும்
(C) 1, 3
(D) அனைத்தும்

26. பரிதிமாற்கலைஞர் குறித்த கூற்றுகளை ஆராய்க.

1. தந்தையாரிடம் வடமொழி பயின்றார்.
2. மகாவித்துவான் சபாபதியிடம் தமிழ் பயின்றார்.
3. எப்.ஏ தேர்வில் முதல் மாணவராக தேர்ச்சி பெற்று பாஸ்கர சேதுபதி மன்னரிடம் உதவி தொகை பெற்றார்.
4. சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் பி.ஏ பயின்று, தமிழிலும் வேதாந்த தத்துவ சாத்திரத்திலும் பல்கலைக்கழக அளவில் முதல் மாணவராக தேர்ச்சி பெற்றார்.

மேற்கண்டவற்றில் எத்தனை சரி ?

(A) 1
(B) 2
(C) 3
(D) 4

27. தவறான இணை எது?

(A) Lobby - ஓய்வறை
(B) Tips - சிற்றீகை
(C) Tiffin - சிற்றுணவு
(D) Checkout - வெளியேறுதல்

28. ‘உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவர்’ பெறுவது குறித்து வள்ளுவர் குறிப்பிடுவன எது?

(A) முயற்சி சிறப்புடையவரை விட மேம்பட்டவர்.
(B) தெளிந்த அறிவுடைய சான்றோர்களை விடவும் மிகப்பெரியவர்.
(C) வானுலகத்தில் உள்ள தெய்வத்திற்கு இணையாக மதிக்கப்படுவர்.
(D) நல்ல குடிகளை காக்கும் அரசனை விட குணமிக்கவர்.

29. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| a. | இல்லறவியல் | - | 1. 13 |
| b. | ஒழிபியல் | - | 2. 32 |
| c. | அமைச்சியல் | - | 3. 20 |
| d. | ஊழியல் | - | 4. 1 |

(A) 3 2 4 1
(B) 3 1 2 4
(C) 4 3 1 2
(D) 3 2 4 1

30. பாடல் வரிகளுக்கு ஏற்ற நூல்களில் சரியாக பொருந்தியுள்ளது எது?
    1. நல்லார் நயவர் இருப்ப நயம் இலாக கல்லார் கொன்றாகிய காரணம்... - பழமொழி நானூறு.
    2. பழையன கழிதலும் புதியன புகுதலும்.. - நன்னூல்
    (A) 1 மட்டும்
    (B) 2 மட்டும்
    (C) 1, 2
    (D) எதுவுமில்லை

31. பொருந்திய இணைகள் எது?
    1. சினம் - சேர்ந்தாரைக் கொல்லி
    2. பயன் தூக்கார் செய்த உதவி - ஞாலத்தின் மாணப் பெரிது
    3. காலத்திநாற் செய்த உதவி - நன்மை கடலின் பெரிது.
    4. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - தெய்வத்துள் வைக்கப்படும்.
    (A) 1, 2
    (B) 2, 3
    (C) 1, 4
    (D) 1, 3, 4

32. பேராசிரியர் அ.கா.பெருமாள் குறிப்பிட்டுள்ள தகவல்களில் எது/எவை சரியற்றது?
    1. நிகண்டுகளை மனப்பாடம் செய்யும் மாணவனுக்கு மதிப்பு இருந்தது.
    2. வணிகம் செய்வதற்கும் கோவிலில் பணி செய்வதற்கும் ஏற்றவாறு கணித முறை கட்டாயமாகக் கற்பிக்கப்பட்டதை கதைப்பாடல்கள் குறிப்பிடுகின்றன.
    3. மாணவர்களுக்கு ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், மூதுரை போன்ற நீதி நூல்கள் கற்பிக்கப்பட்டன.
    4. வாய்ப்பாடுகளை மனப்பாடம் செய்ய பிரபஞ்ச சுவடி என்ற புத்தகம் இருந்தது.
    (A) 1 மட்டும்
    (B) 4 மட்டும்.
    (C) 2, 4
    (D) எதுவுமில்லை

33. கீழ்க்கண்ட கூற்றை கவனி
    கூற்று 1 : 19ம் நூற்றாண்டில், ஒரு பக்கத்தில் மிக நுண்ணி எழுத்துக்களாக இருபதில் இருந்து 30 வரி வரையில் எழுதுவதற்குரிய மெல்லிய எழுத்தாணிகள் இருந்தன.
    கூற்று 2 : அக்காலத்தில் மடங்கள் வேறு, பாடசாலைகள் வேறு என்ற வேறுபாடின்றி இரண்டும் ஒன்றாகவே கருதப்பட்டது.
    மேற்கண்ட கூற்றுகளில் எது எவை தவறு?
    (A) 1,2
    (B) 1 மட்டும்
    (C) 2 மட்டும்
    (D) எதுவுமில்லை

34. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   1. தமிழ்த் தாத்தா என்று அழைக்கப்படுபவர்.
   2. ஆசிரியர்; சிறந்த எழுத்தாளர்.
   3. பழந்தமிழ் இலக்கியங்களைத் தேடித்தேடி அச்சில் பதிப்பிக்க அரும்பாடுபட்டவர்.

   யார் இவர் ?
   (A) உ.வே.சா
   (B) ஆறுமுக நாவலர்
   (C) சி.வை. தாமோதரம்பிள்ளை
   (D) மறைமலையடிகள்

35. "இரண்டு சீரின் இடைவெளியில் தளைகள் வரும்; தளைகள் சென்றே அழைத்திருந்தால் அடிகள் வரும்...................
   இவற்றை எல்லாம் தெரிந்து கொண்டு கவியெழுதத் தொடங்க வேண்டும்" என்று கூறிய கவிஞர் யார்?
   (A) முகமது மீரான்
   (B) அய்யப்ப மாதவன்
   (C) இராசகோபாலன்
   (D) தி.சு.நடராஜன்

36. இடையீடு கவிதை,
   1. 'இதுவரை ' என்னும் கவிதை தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.
   2. இக்கவிதை குறியீடுகளைக் கொண்டு அமைந்துள்ளது.
   3. இக்கவிதை கவிஞரின் கவிதை சார்ந்த எண்ணம், அதனை வெளிப்படுத்தும் வண்ணம், எழுதப்பட்ட கவிதையை உள்வாங்கும் வாசகனின் மனநிலை போன்றவற்றை குறியீடாக குறிப்பிடுகிறது.
   4. இதன் ஆசிரியர் சி.பழனிச்சாமி ஆவார்.

   மேற்கண்டவற்றில் எவை தவறு அல்ல?
   (A) 1, 2, 3, 4
   (B) 2, 3, 4
   (C) 2, 3
   (D) 1, 2, 3

37. கீழ்க்காணும் பாடல் வரிகளுக்கு ஏற்ற நூலில் சரியாக பொருந்தாதது எது?
   1. எத்திசை செலினும், அத்திசை சோறே - புறநானூறு
   2. ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர் - தண்டியலங்காரம்
   3. அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென, வறுந்தலை உலகமும் அன்றே - புறநானூறு

   (A) 1 மட்டும்
   (B) 2 மட்டும்
   (C) 3 மட்டும்
   (D) எதுவுமில்லை

38. சொல்லும் பொருளும் : எது சரியாக பொருந்தியுள்ளது?
   (A) வள்ளியோர் - இளம் பெண்கள்
   (B) கலன் - தேர்
   (C) மழு - கலப்பை
   (D) உரன் - வலிமை

39. பிரித்து எழுதுக: 'எத்திசை'
   (A) எது + திசை
   (B) எ + திசை
   (C) எது + இசை
   (D) எத் + திசை

40. ஔவையார் பாடிய பாடல்களில் 59 பாடல்கள் கிடைத்துள்ளன. பின்வருவனவற்றுள் எது சரியாக பொருந்தியுள்ளது?
   1.அகநானூறு - 4
   2.குறுந்தொகை - 7
   3.நற்றிணை – 15
   4.புறநானூறு - 33
   (A) 1, 2
   (B) 3, 4
   (C) 1, 4
   (D) 1, 3

41. கீழ்க்கண்ட வாக்கியங்களை ஆராய்க.
   1. இந்தியா உலகிலேயே அதிக சாலை போக்குவரத்து வசதிகள் கொண்ட முதல் பெரிய நாடு.
   2. ஏறக்குறைய 55 லட்சம் கிமீ சாலைகள் நம் நாட்டில் உள்ளன.
   3. நாளொன்றுக்கு சாலை விபத்துகளால் மூன்றில் ஒரு பங்கு மக்கள் உயிரிழக்கின்றனர்.
   4. தமிழ்நாடு தான் இந்தியாவிலேயே மிகுந்த சாலை விபத்துக்கள் நடக்கும் மாநிலமாக இருக்கிறது.

   மேலே உள்ளவற்றில் எத்தனை தவறு?
   (A) 1
   (B) 2
   (C) 3
   (D) எதுவுமில்லை

42. வெண்பா அடிவரையறை : சரியாக உள்ள இணைகள் எவை?
   1. மூன்றடி வெண்பா - இன்னிசை சிந்தியல் வெண்பா
   2. நான்கடி வெண்பா - இன்னிசை வெண்பா
   3. 13 அடி முதல் அதற்கு மேற்பட்ட அடிகள் - கலிவெண்பா
   4. இரண்டடி வெண்பா - நேரிசை வெண்பா

   (A) அனைத்தும்
   (B) 1, 2, 3
   (C) 2, 3, 4
   (D) 1, 2, 4

43. மறைமலையடிகள் தொடர்பான பின்வரும் வாக்கியங்களில் எது/எவை சரியற்றது?
   1. பரிதிமாற்கலைஞரின் நண்பர்.
   2. பிறமொழிக் கலப்பின்றி இனிய, எளிய தமிழ் சொற்களைக் கொண்டே பேசவும் எழுதவும் இயலும் என்று நடைமுறைப்படுத்தினார்.
   3. இயற்பெயர் சுவாமி வேதாச்சலம்.

   (A) 1 மட்டும்
   (B) 2 மட்டும்
   (C) 3 மட்டும்
   (D) எதுவுமில்லை

44. பிழைகளற்ற தொடரை கண்டறிக.
   (A) எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது.
   (B) ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.
   (C) ஐப்பசி அடைமழையில் ஊருணி நிறைந்தது.
   (D) வானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

45. தவறான இணை எது?
   (A) Departure - புறப்பாடு
   (B) Passport - கடவுச்சீட்டு
   (C) Visa - நுழைவுச்சீட்டு
   (D) Arrival - வருகை

46. சிற்பி பாலசுப்பிரமணியம் தொடர்பான பின்வரும் கூற்றுகளை கவனித்து தவறான ஒன்றை தேர்வு செய்.
   (A) பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறை தலைவராகப் பணியாற்றியவர்.
   (B) 'ஒரு கிராமத்து நதி' எனும் கவிதைநூலின் மொழிபெயர்ப்புக்காக இரண்டு முறை சாகித்ய அகாடமி விருது வாங்கியவர்.
   (C) சாகித்ய அகாடமி செயற்குழு உறுப்பினராகவும் இருக்கிறார்.
   (D) இவருடைய கவிதைகள் ஆங்கிலம், கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

47. சரியற்ற இணை எது?
   (A) உளப்பாடு - Purport
   (B) மறித்தாக்கம் - Transform
   (C) தாய முறை - Neolocal
   (D) தந்தையகம் - Patrilocal

48. பின்வரும் கூற்றுகளில் எது சரியற்றது?
   (A) இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேர பேசுகின்ற இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும்.
   (B) முல்லைக்கலியில் காளைகளில் பல இனங்களை காட்டுகின்ற சொற்கள் நிரம்பிக் கிடக்கின்றன.
   (C) கிரா, ‘கிடை’ எனும் குருநாவலில் ஆடுகளின் அடையாளங்களை பல பெயர்கள் சொல்லி அழைக்கிறார்.
   (D) மேற்கண்ட எதுவுமில்லை.

49. தி.சு.நடராஜன் தொடர்பான கூற்றுகளில் எது /எவை சரி?
   1. திறனாய்வுக் கலையை தமிழுக்கு அறிமுகப்படுத்தியவரில் குறிப்பிடத்தக்கவர்.
   2. கவிதையெனும் மொழி, திறனாய்வுக்கலை, தமிழ் அழகியல் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.
   3. போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகம், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ் பேராசிரியராக பணிபுரிந்தவர்.

   (A) 1, 2
   (B) 2, 3
   (C) 1, 3
   (D) 1, 2, 3

50. தண்டியலங்காரம்,
   1. காவியதர்ஷம் எனும் வடமொழி இலக்கண நூலை தழுவி எழுதப்பட்ட நூலாகும்.
   2. இது அணி இலக்கணத்தை கூறும் சிறப்பான நூல்களில் ஒன்று.
   3. இதன் ஆசிரியர் கி.பி 11-ஆம் நூற்றாண்டை சார்ந்த தண்டி ஆவார்.
   4. இது பொதுவியல், அறவியல், சொல்லணியியல் என்ற மூன்று பெரும் பிரிவுகளை உடையது.

   மேலே உள்ளவற்றில் எத்தனை சரி?
   (A) 1
   (B) 2
   (C) 3
   (D) அனைத்தும்

51. அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்களில் பொருந்தாதது எது?

1.வீரசோழியம்

2.குவலயானந்தம்

3.முத்துவீரியம்

4.மாறனலங்காரம்

(A) 2, 3

(B) 1, 3

(C) 1, 2

(D) எதுவுமில்லை

52. கீழ்க்கண்ட வாக்கியங்களில் எது தவறு?

(A) எட்டயபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாறு பற்றி 'கவிகேசரி சாமி தீட்சிதர்' என்பவர் வம்சமணி தீபிகை என்னும் நூலில் எழுதினார்.

(B) வம்சமணி தீபிகை என்னும் நூலானது 1879 இல் வெளியிடப்பட்டது.

(C) அப்பதிப்பை திருத்தி வெளியிட ஆசை கொண்ட பாரதி, அப்போது ஆட்சி செய்த வெங்கடேச எட்டப்பருக்கு 1919 இல் கடிதம் எழுதினார்.

(D) ஆனால் 2009இல் இளசை மணி என்பவரால் அந்நூலின் மறுபதிப்பு வெளியிடப்பட்டது.

53. பரலி சு.நெல்லையப்பர் எழுதிய நூல்களில் பொருந்தாதது எது?

1.பாரதி வாழ்த்து

2.உய்யும் வழி

3.திரு. வி.க வின் வாழ்க்கை வரலாறு

4.நெல்லைத்தென்றல்

(A) 2 மட்டும்

(B) 3 மட்டும்

(C) 4 மட்டும்

(D) எதுவுமில்லை

54. பிழையான தொடரை கண்டறிக.

(A) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.

(B) மலைமீது ஏறி கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

(C) காலையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.

(D) மழைநீரில் நெற்பயிர்கள் மூழ்கின.

55. ஆறுமுக நாவலர் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எத்தனை சரி?
   1. ‘உரைநடை கைவந்த வல்லாளர் ‘ என்று புகழப்படுபவர்.
   2. தமிழ், வடமொழி, ஆங்கிலம் எனும் நம் மொழிப் புலமை பெற்றவர்.
   3. திருக்குறள் பரிமேலழகர் உரை, குண்டலகேசி நிகண்டு போன்ற பல நூல்களை பதிப்பித்துள்ளார்.
   4. இலக்கண நூல்கள், பூமி சாஸ்திரம் முதலான பாடநூல்கள் இவரால் உருவாக்கப்பட்டதாகும்.

(A) 1
(B) 2
(C) 3
(D) 4

56. பின்வருவனவற்றுள் தவறு அல்லாதது எது?
(A) Archive - மறைத்தல்
(B) Fiction - தொடர்
(C) Bibliography - நூல் வெளி
(D) Manuscript - கையெழுத்துப் பிரதி

57. கீழ்க்கண்ட கூற்றை கவனி
கூற்று 1: ஐநா சபை 1992 ஆம் ஆண்டு காலநிலை மாற்றம் பற்றிய பணித்திட்டப் பேரவையை உருவாக்கியது.
கூற்று 2 : இந்த அமைப்பின் தொடக்கத்தில் 50 நாடுகள் உறுப்பினராக இருந்தாலும் பின்னர் இந்த எண்ணிக்கை 190 நாடுகளாக உயர்ந்தது.
மேலே உள்ளவற்றில் எது/ எவை சரி?
(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 1, 2
(D) எதுவுமில்லை

58. நடுவன் அரசு எந்த ஆண்டு தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது?
(A) 2004
(B) 2005
(C) 2006
(D) 2007

59. ‘நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது’ என்று அய்யப்ப மாதவன் எதனை குறிப்பிடுகின்றார்?
(A) தென்றல் காற்று
(B) கடல் அலை
(C) மழைத் துளிகள்
(D) சூரியக்கதிர்

60. நெடுநல்வாடை தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது/ எவை சரி?
   1. ஆசிரியர்: மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரர்.
   2. பாட்டுடைத் தலைவன்: பாண்டியன் நெடுஞ்செழியன்.
   3. இந்நூல் 188 அடிகளைக் கொண்டது.
   4. கலிப்பாவால் இயற்றப்பட்டது.
   (A) 1, 3
   (B) 1, 2, 4
   (C) 2, 4
   (D) அனைத்தும்

61. உத்தமசோழன் தொடர்பான கூற்றுகளை ஆராய்க.
   1. இயற்பெயர்: செல்வமணி
   2. இவர் திருத்துறைப்பூண்டி பகுதியைச் சார்ந்தவர்.
   3. இவர் ‘கிழக்கு வாசல் உதயம்’ என்ற வாரஇதழை கடந்த 12 ஆண்டுகளாக நடத்தி வருகிறார்.
   மேலே உள்ளவற்றில் எது/ எவை தவறு?
   (A) 1 மட்டும்
   (B) 3 மட்டும்
   (C) 1 & 2
   (D) எதுவுமில்லை

62. பின்வரும் கூற்றுகளில் எது தவறு?
   (A) கிபி 1805 முதல் கிபி 18 61 வரை ஆங்கிலத்தில் இருந்த நீதிமன்ற தீர்ப்புகளை முதன் முதலில் தமிழில் மொழிபெயர்த்தவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை ஆவார்.
   (B) அந்த நூலானது, ‘சித்தாந்த சங்கிரகம்’ என்று அழைக்கப்படுகிறது.
   (C) இசையிலும் வீணை வாசிப்பதிலும் வல்லவராக திகழ்ந்தவர்.
   (D) இவர் வடமொழி, பிரெஞ்சு, கிரேக்கம், பாலி முதலிய நூல்களை கற்றுள்ளார்.

63. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.
   1. குடும்பு என்ற சொல் கூடி வாழுதல் என்று பொருள்படுகின்றது.
   2. மணம் புரிந்த கணவனும் மனைவியும் சேர்ந்து இல்லற வாழ்வில் ஈடுபடக் கூடிய தொடக்கக் கட்டமே மணந்தகம் எனப்படுகிறது.
   3. திருமணத்திற்குப் பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து தனியாக வாழும் இடம் ‘தன்மனை’ என வழங்கப்படுகிறது.
   4. சங்ககாலத்தில் கண சமூகத்துக்கு தாயே தலைமை ஏற்று இருந்தாள்.
   மேற்கண்டவற்றில் எத்தனை சரி ?
   (A) 1
   (B) 2
   (C) 3
   (D) 4

64. தமிழர் பரம்பரை வரிசைகளில் பொருந்தாதது எது?
(A) பரன், ஓட்டன், பாட்டி, பெயர்த்தி
(B) சேயோள், பாட்டன், மகள், ஓட்டி
(C) பரை, ஓட்டி, பூட்டன், பெயரன்.
(D) ஓட்டன், பூட்டி, தந்தை, மகள்.

65. கீழ்க்கண்ட கூற்றை கவனி
1. தமிழ்ச்சமூகம், பண்பாடு சார்ந்த மானிடவியல் ஆய்வுகளை முன்னெடுப்பவர்.
2. பழங்குடிகள், நாடோடிகள் உள்ளிட்ட விளிம்பு நிலை சம்பவங்கள் பற்றிய ஆய்வை நடத்தியவர்.
யார் இவர்?
(A) பக்தவத்சல பாரதி
(B) தி சு நடராஜன்
(C) நா.வானமாமலை
(D) ஆர். பாலகிருஷ்ணன்

66. ஜலாலுதீன் ரூமி,
1. ஆப்கானிஸ்தான் நாட்டில், கிபி 1207 ஆம் ஆண்டில் பிறந்தவர்.
2. இவர் மிகச்சிறந்த உருது கவிஞர்களில் ஒருவர்.
3. இவர் சூஃபி தத்துவப் படைப்பான 'மஸ்னவி' எனும் நூலை இயற்றியுள்ளார்.
4. இவரது மற்றுமொரு புகழ் பெற்ற நூல், திவான்-ஈ- ஷம்ஸ்- ஈ - தப்ரிசி.
மேற்கண்ட ஒன்றில் எது எவை சரியற்றது?
(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 3 மட்டும்
(D) எதுவுமில்லை

67. "முன்பு உளேம் ஒரு நால்வேம்
...... ......
..............நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்"
இவ்வாறு இராமன் தனது ஐந்தாவது உடன்பிறப்பாக யாரை ஏற்றுக் கொண்டான்?
(A) அனுமன்
(B) சடாயு
(C) குகன்
(D) சுக்ரீவன்

68. இலக்கணக்குறிப்பு: தவறானது எது?

(A) மாதவம் - உரிச்சொற்றொடர்

(B) உளது - இடைப்போலி

(C) நுந்தை- மரூஉ

(D) தாழ்கடல்- வினைத்தொகை

69. கம்பராமாயணம் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது/ எவை சரி?

1. இது ஐந்து காண்டம், 113 படலங்கள் கொண்டது.
2. இதற்கு கம்பர் இராமவதாரம் என்று பெயர் சூட்டினார்.
3. இவாது காலம், கிபி. பன்னிரண்டாம் நூற்றாண்டு ஆகும்.
4. இந்நூலின் முதல் காண்டமாக அயோத்தியா காண்டம் இடம்பெறுகிறது.

(A) 1, 2, 3

(B) 2, 4

(C) 2, 3

(D) அனைத்தும்

70. கவிஞர் பூ.மணியின் படைப்புகளை ஆராய்க.

1. சிறுகதை தொகுப்புகள்: அறுப்பு, வயிறுகள், ரீதி.
2. புதினம்: வெக்கை, பிறகு, கொம்மை.
3. அஞ்ஞாடி எனும் புதினத்திற்காக 2014இல் சாகித்திய அகாதெமி விருது பெற்றார்.
4. இவர் ‘கருவேலங்காடு’ என் திரைப்படத்தையும் இயக்கியுள்ளார்

மேற்கண்டவற்றுள் எது/ எவை தவறு அல்லாதது?

(A) 1, 2, 3

(B) 2, 3, 4

(C) 3, 4

(D) அனைத்தும்

71. “உவா உற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்” - என்பவர் யார்?

(A) இராமன், குகன்

(B) இராமன், சுக்ரீவன்

(C) இராமன், அனுமன்

(D) சடாயு, குகன்

72. பரிதிமாற்கலைஞர் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது /எவை தவறு?
   (A) களவழி நானூறு எனும் நூலைத் தழுவி ‘மான விஜயம்’ என்னும் நூலை இயற்றினார்.
   (B) ஆங்கில நாடக இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு ‘நாடகவியல்’ என்னும் நாடக இலக்கண நூலையும் இயற்றினார்.
   (C) இவரது ‘தனிப்பாசுரத் தொகை’ என்னும் நூல் ஜி யு போப் அவர்களால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.
   (D) இவர் ‘ஞானபோதினி’ எனும் அறிவியல் இதழை பூரணலிங்கனாருடன் இணைந்து நடத்தினார்.

73. திருக்குறள்,
   1. ஏட்டுச்சுவடியில் இருந்து முதன் முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு 1812.
   2. தமிழக அரசு, 133 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலையை கன்னியாகுமரியில் நிறுவியுள்ளது.
   3. வள்ளுவரின் நினைவைப் போற்றும் வகையில் வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டுள்ளது.

   மேற்கண்டவற்றில் எத்தனை சரி?
   (A) 1
   (B) 2
   (C) 3
   (D) எதுவுமில்லை

74. “தமிழ்தன் தப்பின் அது நோன் றல்லும்
   பிறர்க்கை யிறவு தான் நாணுதலும்.......” என்று பாடிய சங்ககாலப் பெண்பாற்புலவர் யார்?
   (A) அஞ்சியத்தை மகள் நாகையார்
   (B) குறமகள் இளவெயினி
   (C) ஒக்கூர் மாசாத்தியார்
   (D) அள்ளூர் நன்முல்லையார்

75. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   1.உயிரின மருத்துவர்.
   2.மில்டனின் சுவர்க்க நீக்கத்தை தமிழில் மொழி பெயர்த்தவர்.

   இவர் யார்?
   (A) சோமசுந்தர பாரதியார்
   (B) இராசமாணிக்கனார்
   (C) வ.சுப.மாணிக்கம்
   (D) ப. சுப்பிரமணியனார்

76. பொருந்தா இணை எது?

1.வித்தியாரம்பம் - கல்விப் பயிற்சி

2.வித்தியாப்பியாசம் - கல்வி தொடக்கம்

3.அக்ஷராப்பியாசம் - எழுத்துப் பயிற்சி

4.குழிமாற்று - பெருக்கல் வாய்ப்பாடு

(A) 3 மட்டும்

(B) 1, 2

(C) 2, 3

(D) எதுவுமில்லை

77. பாடல் வரிகளுக்கேற்ற நூல்களில் பொருந்தி உள்ளது எது?

1.மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும் - பிள்ளைத்தமிழ்.

2.ஐயாண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள் - சிந்தாமணி

3.வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை..- நன்னூல்

(A) 1, 2, 3

(B) 1, 2

(C) 2, 3

(D) 1, 3

78. பின்வருவனவற்றுள் உ. வே .சா அவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டங்களுள் தவறானது எது?

(A) மகாமகோபாத்தியாய

(B) அக்ஷரா நவத்வீபர்

(C) திராவிட வித்தியா பூஷணம்

(D) தாக்ஷினாத்திய கலாநிதி

79. சுரதா தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது தவறு.

(A) உவமைக் கவிஞர் என்று சிறப்பிக்கப்படுபவர்.

(B) இயற்பெயர் சுப்புரத்தினதாசன்.

(C) முழுக்க முழுக்கக் கவிதைகளையே கொண்ட ‘காவியம்’ எனும் இதழை நடத்தியவர்.

(D) இலக்கியம், விண்மீன், ஊர்வலம் போன்ற இலக்கிய ஏடுகளையும் நடத்தியவர்.

80. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   1. கனியின் இனிமை கனியில் மட்டுமில்லை, சுவைப்போன் பசியை, சுவை முடிச்சைச் சார்ந்தது - பூ.மணி
   2. விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு - சி. மணி
   3. பெற்றெடுத்த தமிழ்த் தாயை பின்னால் தள்ளி
பிறமொழிக்கு சிறப்பளித்த பிழையை நீக்க - சுரதா
மேற்கண்டவற்றில் எத்தனை தவறு?
(A) 1
(B) 2
(C) 3
(D) எதுவுமில்லை

81. சி. மணி தொடர்பான பின்வரும் கூற்றுகளை ஆராய்ந்து எது/எவை தவறு அல்லாதது என்பதை தேர்வு செய்.
   1. 1959 ஆம் ஆண்டு முதல் 'எழுத்து' இதழில் இவரது கவிதைகள் தொடர்ந்து வெளிவந்தன.
   2. 'நடை' எனும் இலக்கிய இதழையும் நடத்தினார்.
   3. இவரது புனைப்பெயர்: வே.மாலி, செல்வம்
   4. தமிழ்ப்பேராசிரியரான இவர் 'தாவோ தே ஜிங்' எனும் சீன மெய்யியல் நூலை தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.
(A) 1, 3
(B) 1, 3, 4
(C) 1, 4
(D) 1, 2, 4

82. உ.வே.சா வின் பெருமைகள்,
   1. இவர் 1932 வில் சென்னை பல்கலைக்கழகத்தினால் டாக்டர் பட்டம் பெற்ற பெருமைக்குரியவர்.
   2. அவரது திருவுருவச் சிலை சென்னை மாநிலக் கல்லூரியில் வங்கக்கடலை நோக்கி நிற்கும் வண்ணம் நிறுவப்பட்டுள்ளது.
   3. சென்னை திருவான்மியூரில் இவரது பெயரால் நூலகம் அமைந்துள்ளது.
மேற்கண்டவற்றில் எது/ எவை தவறு?
(A) 1
(B) 2
(C) 3
(D) ஏதுமில்லை

83. கவிஞர் சுரதா பெற்ற விருதுகளில் சரியற்றது எது?
(A) தமிழக அரசின் கலைமாமணி விருது
(B) பாரதியார் விருது
(C) பாரதிதாசன் விருது
(D) தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தின் இராசராசன் விருது

84. பொருத்துக. மறைமலையடிகளின் இதழ்கள்.

a. ஞானசாகரம் - 1. 1908
b. Ocean of Wisdom - 2. 1935
c. Oriental Mystic Myna - 3. 1902

(A) 3 1 2
(B) 2 3 1
(C) 3 2 1
(D) 2 1 3

85. சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்களின் கவிதை நூல்களில் சரியாக உள்ளது எது?

1.சர்ப்பயாகம்
2.மாய நிழல்
3.பூஜ்யங்களின் சங்கிலி
4.நிலவுப்பூ

(A) 1, 2, 3
(B) 1, 3, 4
(C) 1, 2, 3, 4
(D) 1, 2, 4

86. பரலி சு.நெல்லையப்பர் பாரதியாரின் எந்த நூல்களை பதிப்பித்துள்ளார்?

1.பாப்பாப்பாட்டு
2.கண்ணன் பாட்டு
3.நாட்டுப்பாட்டு
4.முரசுப்பாட்டு

(A) 1, 2, 3
(B) 1, 3, 4
(C) 1, 2, 3, 4
(D) 1, 2, 4

87. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1 : மாயூரம் வேதநாயகத்தின் சமகாலத் தமிழர்கள் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார், வள்ளலார், சுப்பிரமணிய தேசிகர் ஆகியோர் ஆவர்.

கூற்று 2: இவர் பெண்மதிமாலை , திருவருள் அந்தாதி, சுகுணசுந்தரி முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

மேற்கண்ட கூற்றுகளில் எது/ எவை சரி?

(A) 1, 2
(B) 1 மட்டும்
(C) 2 மட்டும்
(D) எதுவுமில்லை

88. கீழ்க்கண்ட கூற்றுகளில் எது/ எவை தவறு?
   (A) இளம் தம்பதியினருக்கு ஏற்ற அறிவுரை கூறி நெறிப்படுத்தும் பணி செவிலிக்குரியது என்று தொல்காப்பிய நூல் கூறுகிறது.
   (B) மனைவியின் இல்லத்துக்குச் சென்று கணவன் வாழ்வதே நடைமுறையாக இருந்தது என்று ஐங்குறுநூறு கூறுகிறது.
   (C) தாய் வழி சொத்துக்கள் பெண்டிருக்கே போய்ச் சேர்ந்தன என்பதை ஒரு மருதத்திணைப் பாடல் மூலம் குறுந்தொகை கூறுகிறது.
   (D) ஒரு பெண் தன் கணவனையே முழுவதும் சார்ந்திருந்த நிலையை குறுந்தொகை மூலம் அறிய முடிகிறது.

89. “மகனுடன் அறுவர் ஆனேம்; .........
   நின்னொடும் எழுவர் ஆனேம்;” - ராமன் யாரை குறிப்பிடுகிறார்?
   (A) அனுமன், சுக்ரீவன்
   (B) சுக்ரீவன், அனுமன்
   (C) சுக்ரீவன், வீடணன்
   (D) வீடணன், சுக்ரீவன்

90. பின்வரும்வற்றுள் தவறானது எது?
   (A) அனயம் - நிறைவானது
   (B) குறுக்கம் - சிறிய நிலப்பரப்பு
   (C) தெகஞ்சத - முடிந்ததை
   (D) எச்சௌந்தவன் - பணக்காரன்

91. பின்வருவனவற்றுள் எத்தனை இணைகள் சரி?
   1.உற்றாருறவினர் - உம்மைத்தொகை
   2.சீரும்சிறப்பும் நேரிணைச்சொற்கள்
   3.மேடுபள்ளம் - எதிரிணைச்சொற்கள்
   (A) 1
   (B) 2
   (C) 3
   (D) எதுவுமில்லை

92. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   கூற்று 1 : நடுவண் அரசு 2004 ஆம் ஆண்டு தமிழ் மொழியை உயர்தனிச் செம்மொழியாக அறிவித்தது.
   கூற்று 2 : தமிழை உயர்தனிச் செம்மொழி என்று தன் பேச்சின் மூலம் முதன் முதலில் மெய்ப்பித்தவர் மறைமலையடிகள் ஆவார்.
   (A) கூற்று 1 சரி 2 தவறு
   (B) கூற்று 1 தவறு 2 சரி
   (C) இரண்டு கூற்றும் சரி
   (D) இரண்டு கூற்றும் தவறு

93. பின்வரும் திருக்குறளில் விடுபட்ட சீரினை பூர்த்தி செய்க.
“நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்
உண்மை அறிவே ___”
(A) வேறு
(B) சுடும்
(C) மிகும்
(D) வரும்

94. கீழ்க்கண்ட கூற்றை கவனி
1. ‘வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு’ என்று கூறியவர் பாரதியார்.
2. ‘வள்ளுவனை பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே’ என்று கூறியவர் பாரதிதாசன்.
மேலே உள்ள கூற்றுகளில் எது /எவை சரி?
(A) 1, 2
(B) 1 மட்டும்
(C) 2 மட்டும்
(D) எதுவுமில்லை

95. பின்வரும் தொடர்களில் எது தவறாக பொருந்தி உள்ளது.?
(A) பின்னத்தூர் நாராயணசாமி நற்றிணை நூலின் ஆசிரியர் ஆவார்.
(B) வேங்கடசாமி மணிமேகலைக்கு உரை எழுதியுள்ளார்.
(C) வ.சுப.மாணிக்கம் மதுரைப் பல்கலைக்கழக துணைவேந்தராக இருந்துள்ளார்.
(D) சுப்பிரமணிய பாரதியின் நண்பரும் வழக்குரைஞருமாக இருந்தவர் நாவலர் சோமசுந்தர பாரதியார்.

96. பின்வரும் கூற்றுகளில் எத்தனை தவறு?
1. உபாத்தியாயர் ஒன்றைச் சொல்ல அதை மாணாக்கர்கள் பலரும் சேர்ந்து சொல்வதை ‘முறை வைப்ப’ தென்று கூறுவார்கள்.
2. மை தடவிப் புத்தகத்தை வாசிக்கத் தொடங்குவதால் அக்ஷரப்பியாசத்தை மையாடல் விழா என்று கூறுவார்கள்.
3. இரட்டைத் துளையுள்ள ஏடுகளில் ஒரு துளையில் செப்புக்கம்பி அல்லது மூங்கில் குச்சியை செருகிக் கட்டுவது நாராசம் என்று கூறுவர்.
(A) 1
(B) 2
(C) 3
(D) எதுவுமில்லை

97. கவிஞர் சுரதாவின் படைப்புகளில் பொருந்தாதது எது?
   (A) தேன்மழை
   (B) பாலும் தேனும்
   (C) மங்கையர்க்கரசி
   (D) துறைமுகம்

98. சி.மணி அவர்கள் பெற்ற விருதுகளில் தவறானது எது?
   1.தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக விருது
   2.ஆசான் கவிதை விருது
   3.கவிஞர் வாலி விருது
   4.விளக்கு இலக்கிய விருது
   (A) 1
   (B) 2
   (C) 3
   (D) 1 & 2

99. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   1. மற்றப் பாக்களை விட வரையறுத்த இலக்கண கட்டுக்கோப்பு உடையது வெண்பா. இதனாலேயே வெண்பாவை ‘ வன்பா’ என்று என்பார்கள்.
   2. வெண்பா வெண்டைளையால் அமைய வேண்டும் என்பதே இன்றியமையாத விதி ஆகும்.
   மேற்கண்டவற்றில் எது/ எவை சரி?
   (A) 1, 2
   (B) 2 மட்டும்
   (C) 1 மட்டும்
   (D) எதுவுமில்லை

100. கீழ்க்கண்டவற்றுள் எது தவறு?
   (A) பெரும்பாலும் நீதி இலக்கியங்கள் வெண்பா வடிவத்திலேயே தோன்றின.
   (B) சங்க காலத்திலிருந்து வெண்பா இலக்கியங்கள் செல்வாக்கு பெற்றது.
   (C) சொல்லுதலை (செப்பல்) அடிப்படையாகக் கொண்டு தோன்றியது வெண்பாவாகும்.
   (D) வெண்பா ஏழு வகைப்படும்.

******